1990 ஏப்ரல் 21] [திரு. அ. பாப்பா சுந்தரம்]

சாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த குளங்களை எல்லாம், குறிப்பாக நல்லூர், புழுதேரி, கழுதூர், புத்தூர், வரகூர் போன்ற கிராமங்களில் இருக்கிற குளங்களை எல்லாம் நல்லமுறையில் வெட்டித் தர வேண்டுமென்று கேட்டு, இத்துடன் என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாப்பா சுந்தரம் அவர்களுக்கு முன்னால் இருக்கிற ஒலி வாங்கியின் உயரம் சற்றுக் கூட்டப்படும். (சிரிப்பு).

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) பேரவை அலுவல்கள்.

13-05 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்கப் பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்:

23—4—1990 திங்கட்கிழமை	அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்
24—4—1990 செவ்வாய்க் கிழமை முதல் 1—5—1990 செவ்வாய்க் கிழமை வரை	மாற்றம் ஏதுமில்லை
2—5—1990 புதன்கிழமை	36. பாசனம்
	37. பொதுப் பணிகள்—கட்டிடங்கள்.
	38. பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும்.
	39. சாலைகளும், பாலங்களும்.
	52. பாசனம் குறித்த மூலதனச் செலவு

[பேரவைத் தலைவர்] [1990 ஏப்ரல் 21

	53. பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு
	54. சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
	(பேரவை மாலையிலும் கூடும்)
3—5—1990 வியாழக்கிழமை மற்றும் 4—5—1990 வெள்ளிக்கிழமை	2. மாநில ஆயத் தீர்வைத் துறை 15. காவல் துறை 16. தீயணைப்புப் பணிகள்
5—5—1990 சனிக்கிழமை	(1) 7. மாநிலச் சட்டமன்றம் 8. தேர்தல்கள் (2) 1990-91 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகள் பொறுத்த வரை விவாதமின்றி 1.00 மணிக்கு வாக்கெடுப்பு (3) வாக்கெடுப்பிற்குப் பின் 1990-91 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு—அறிமுகம் செய்தல்
6—5—1990 ஞாயிற்றுக் கிழமை.	விடுமுறை
7—5—1990 திங்கட்கிழமை	1990-91 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்.

8—5—1990 செவ்வாய்க் கிழமை மற்றும் 9—5—1990 புதன்கிழமை	அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்
10—5—1990 வியாழக்கிழமை	தனியார் அலுவல்கள்
11—5—1990 வெள்ளிக்கிழமை மற்றும் 12—5—1990 சனிக்கிழமை	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1989-90-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மற்றும் 1988-89 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம்.

பேரவை வழக்கம்போல் காலை 9—00 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் இன்று மாலை 16-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 13-06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

16-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் மாலை 16-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

10. மானியக் கோரிக்கைகள், 1990-91, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990-91ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி. இந்த விவசாயிகளினுடைய மானியக் கோரிக்கையில் ஏற்கனவே இந்த அரசால் அனைத்து சிறு விவசாயிகளுக்கும் பழைய கூட்டுறவுக் கடன்களை முழுவதுமாக தள்ளுபடி செய்வதாகத் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இதுவரை முழுமையாக சிறு விவசாயிகளுக்குக் கடன்களை தள்ளுபடி செய்வதாகக் காணோம். அது மட்டுமல்லாமல் சிறு விவசாயிகளுக்கு அவர்கள் விவசாயம் செய்யும்போது அதற்கு ஏற்ற செலவு இருக்கும். அதுபோல் பெரிய விவசாயிகளுக்குக் கூடுதலான விவசாயப் பணிகள், செலவுகள் இருக்கும். ஆகையினால் அவர்களுக்கும் அந்த வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டும். மத்திய அரசு அனைத்துச் சிறு விவசாயிகளுக்கும் 10 ஆயிரம் ரூபாய்